Fruit Farm in Cape Comorin

* 479. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Cape Comorin Fruit Farm in Kanyakumari district is to be developed into a Research Centre; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஆம், கன்னியாகுமரியிலுள்ள பழப்பண்ணையை ஒரு ஆராய்ச்சி நிலையமாக ஆக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான முழு விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : எப்போது அது தனி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விரைவில் அதுபற்றி முடிவு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒட்டப்பிடாரத்தில் தீவிர வாழை சாகுபடித்திட்டம்

* 480 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்களில் வாழை பயிரிடுவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தூத்துக்குடியிலும், அதன் சுற்றுப்புறத்திலும், தீவிர வாழை சாகுபடித்திட்டம் ஒன்று செயல் பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த கிராமங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நீண்டகாலக், குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமும், வணிக வங்கிகள் மூலமும், ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் வாழை பயிரிடுவதற்காக அளிக்கப்படுகின்றன. தீவிர வாழை சாகுபடி திட்டத்தை கவனிக்கவும், விவசாயிகளுக்கு தீவிர வாழை சாகுபடி முறைகளைப்பற்றி அறிவுறுத்தவும் ஒட்டப்பிடாரத்தில் ஒரு விவசாய உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எம். முத்தையா : ஒட்டப்பிடாரத்தில் எத்தனை கிராமங்கள் இந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அந்தத் திட்டம் திருநெல்வேலி ஜில்லாவில் எந்த இடங்களில் எல்லாம் விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது ?

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த தீவிர வாழைச் சாகுபடித் திட்டம் தற்போது கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் நடத்தப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த ஓட்டப்பிடாரத்திற்கு அருகே இருக்கும் வாழை சாகுபடி திட்டத்தால் லாபம் ஏதாவது ஏற்பட்டு இருக்கிறதா, அது ஒழுங்காக நடைபெறுகிறதா, வெட்ப தட்ப நிலை சரியாக இருக்கிறதா என்று விவசாய இலாகாவினால் ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், அந்த முழு விவரங்களையும் தெரிவிக்கிறேன்.

முந்திரி பயிரிடுவோருக்குக் கடன்

* 481 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

முந்திரி பயிரிடுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு கடன் தொகை ஏதேனும் வழங்கி வருகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த முந்திரித் தொழிலை வளர்ப்பதற்காக எந்தெந்த மாவட்டங்களில் உள்ளவர் களுக்கு கடன் அளிக்கப்பட்டு வருகிறது? ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு தொகை அளிக்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது முந்திரி அபிவிருத்தித் திட்டம் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 விதம் கடன் உதவி முந்திரி சாகுபடிக்கு என்று வழங்கப்பட்டு வருகிறது. முதல் தவணையாக ரூ. 100-ம், இரண்டாம் தவணையாக ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட நபர்களுக்கு அதிக பட்சமாக ரூ. 3,000 வழங்கப் படுகிறது. கடன் கொடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தவணை தொடங்கப்பட்டு, ஐந்தாண்டு சம தவணை முறையில் கடன் தொகை வசூலிக்கப்படுகிறது.